DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | | |
|---|---|---|
| Calendar | | --- |
| Miscellaneous | | --- |
| Preliminary Register | : | **CC 149/2024** |
| Deposition of Witness for | : | PW 11 |
| Name | : | Dr. கிருஷ்ணவேணி |
| **Father's Name** | **:** | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 22.01.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 22nd January 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. நீதிமன்றம் தானாக சாட்சி அளிக்கும் சாட்சியத்தை பதிவு செய்கிறது.**

முதல்விசாரணை:

நான் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் முதன்மை குடிமை மருத்துவராக பணிபுரிந்து தற்போது பணிஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 22.08.2013 அன்று காலை 6.55 மணியளவில் இடையன்குளம் ஊரைச்சேர்ந்த வெள்ளையம்மாள் என்ற 70 வயதுடைய பெண்ணை அரிச்சந்திரன் என்ற டிரைவர் என்னிடம் சிகிச்சைக்கு அழைத்து வந்தார். மேற்படி நபர் 22.08.2013 அன்று காலை 6.30 மணியளவில் இடையன்குளத்திற்கு கிழக்கே ரோட்டில் நடந்துபோகும்போது டிரக் வண்டி மோதியதால் காயம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. அவர் சுயநினைவில் இல்லை. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு.

1. தலையின் வலது பக்கம் பரைட்டல் பகுதியில் 5x5 செமீ அளவில் வீக்கக்காயம்,

2. வலதுபக்க காதில் ரத்தம் வருகிறது.

அவருக்கு தலைக்காயம் ஏற்பட்டதால் மேல் சிகிச்சைக்காக திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைத்தேன். அதன்பின்னர் திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு செல்லும் வழியில் வெள்ளையம்மாள் இறந்துவிட்டதாக போலீசார் சொல்ல கேள்விப்பட்டேன். **வெள்ளையம்மாளின் விபத்து பதிவேடு அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் முதல்விசாரணையில் கூறிய இருகாயங்களை தவிர்த்து வேறு காயங்கள் வெள்ளையம்மாளின் உடம்பில் காணப்பட்டதா என்றால் இல்லை. நான் முதல்விசாரணையில் கூறிய வெள்ளையம்மாளின் காதில் இருந்த ரத்தத்தின் நிறம் மாறுபட்டு காணப்பட்டதா என்றால் இல்லை. விபத்து பதிவேட்டில் வெள்ளையம்மாளை மோதியதாக சொல்லப்படும் டிரக் வண்டி அரிச்சந்திரனால் ஓட்டப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஒரு வயதான நபர் நடந்து செல்லும்போது கீழே விழுந்து கல்லில் தலை இடித்துவிட்டால் நான் முதல்விசாரணையில் கூறிய இருகாயங்கள் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் அவர் வேகமாக கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது. திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்ட வழியில் வெள்ளையம்மாள் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன் என்ற விபரத்தை போலீசாரிடம் கொடுத்த என் வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | | |
|---|---|---|
| Calendar | | --- |
| Miscellaneous | | --- |
| Preliminary Register | : | **CC 149/2024** |
| Deposition of Witness for | : | PW 12 |
| Name | : | Dr.வேலம்மாள் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 22.01.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 22nd January 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. நீதிமன்றம் தானாக சாட்சி அளிக்கும் சாட்சியத்தை பதிவு செய்கிறது.**

**முதல்விசாரணை:**

நான் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் முதன்மை குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.08.2013ம் தேதி நான் பணியில் இருந்தபோது காலை 8.55 மணியளவில் 70 வயதான வெள்ளையம்மாள் என்பவரின் உடலை அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் கொண்டுவரப்பட்டது. அந்த உடல் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டது எண்.386 கொண்ட விபத்து பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டது. வெள்ளையம்மாள் திருநெல்வேலி அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்டு ஆம்புலன்ஸ்ல் கொண்டு செல்லும்போது மரணித்தார். அவரது உடல் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டது. பரிசோதனையின்போது அவரது உடலில் நாடித்துடிப்பு இல்லை. அவரது ரத்த அழுத்தமும், இருதயத்துடிப்பும், மூச்சும் இல்லை. அவரது கண் கருவிழி இயங்கவில்லை. இறந்துபோன வெள்ளையம்மாளின்

உடல் சங்கரன்கோவில் மருத்துவமனை சவக்கிடங்கில் வைக்கப்பட்டது. வெள்ளையம்மாளின் உடலை பரிசோதனை செய்ததில் அவரது உடலில் கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. தலையின் வலது பக்கம் பரைட்டல் பகுதியில் 5x5 செமீ அளவில் வீக்கக்காயம் காணப்பட்டது.

2. மூக்கின் இரு துவாரங்களிலிருந்தும், இரு காதுகளிலிருந்தும், வாயிலிருந்தும் ரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

**எண்.386 கொண்ட வெள்ளையம்மாளின் விபத்து பதிவேடு அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் முதல்விசாரணையில் கூறிய இரு காயங்களை தவிர்த்து வெள்ளையம்மாளின் தலையின் பின்பக்கத்திலோ அல்லது அவரது உடலில் வேறு காயங்கள் இருந்ததாகவோ அ.சா.ஆ.9 ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. காயம்பட்ட ஒரு நபரின் காயத்திலிருந்து வடியும் ரத்தம் எப்போது உறையும் என்றால் காயம்பட்ட நபரின் உடல் தன்மையை பொறுத்தது. வெள்ளையம்மாளின் உடலில் நான் முதல்விசாரணையில் கூறிய இரண்டாவது காயத்திலிருந்து வடிந்த ரத்தம் உறைந்த நிலையில் இருந்ததாகவோ, அதன் நிறம் மாறுபட்டிருந்ததாகவோ அ.சா.ஆ.9 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**